


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 19.09.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @
**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- பொருளாதார நிகழ்வுகள்
- விளையாட்டு செய்திகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்











WeShine Academy TM

# இந்திய நிகழ்வுகள்

- வங்காளதேசத்திற்கு டீசல் மற்றும் இயற்கை எரிவாயுவை எடுத்துச் செல்வதற்காக, மேற்கு வங்காள மாநிலம் **சிலிகுரியில்** இருந்து **வங்காள தேசத்தின் தினஜ்பூர்** மாவட்டத்தில் உள்ள பர்பத்திப்பூர் பகுதி வரையில் 131 கிலோ மீட்டர் தூரத்திற்கு குழாய் அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழாய் மூலம் டீசல் கொண்டு செல்லப்படுகிறது.
    - மேலும் மேற்கு வங்காளத்தின் தாத்தபுலிய பகுதியில் இருந்து, வங்காள தேசத்தில் குல்னா பகுதி வரை இயற்கைவாயு கொண்டு செல்வதற்கான குழாய் அமைக்கப்பட்டுள்ளது.

- பொதுத்துறை நிறுவனமான **இந்திய விமான நிலையங்கள்** ஆணையமானது, இந்தியாவின் முதல் வெளிநாட்டு விமான நிலையத்தை இலங்கையில் **யாழ்பாணத்தில்** உள்ள **பலாலி** என்ற இடத்தில் அமைக்கவுள்ளது.
- **குறிப்பு:**
    - இந்திய விமான நிலைய ஆணையம், இந்தியாவில் சுமார் 60 விமான நிலையம் அமைத்து மேலாண்மை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

# உலக நிகழ்வுகள்

- சுற்றுச்சூழலுக்கு கேடு இல்லாத வகையில், **கார்பன் - டை – ஆக்ஸைடை வெளியிடாத, ஹைட்ரஜனில்** இயங்கும் உலகின் முதல் இரயில் **ஜெர்மனியில்** அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
    - முதற்கட்டமாக வடக்கு ஜெர்மனியில் உள்ள **கக்ஸா-ஹெவன், பிரிமெர் ஹெவன், பக்ஸிடிஹூட் Cuxhaven, Bremerhaven Bremervoerde and Buxtehude** ஆகிய நகரங்களுக்கிடையே இயக்கப்பட்டது.

- மாஸ்கோவில் வர்த்தக, பொருளாதார, அறிவியல், தொழில்நுட்ப

மற்றும் கலாச்சாரம் மீதான இந்திய – ரஷ்ய அரசாங்கத்திற்கு இடைப்பட்ட ஆணையத்தின் **(IRIGC – TEC , Economic, Scientific, Technological and Cultural Cooperation)** 23வது கூட்டம் நடைபெற்றது. வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இந்திய பிரதிநிதி குழுவிற்கு தலைமைத் தாங்கினார்.

  - IRGC – TEC ஆனது ஆண்டுதோறும் சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பின் தொடர்ச்சியான நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்யும் ஒரு நிலையான அமைப்பாகும்.

- சர்வதேச வர்த்தகத்தில் தற்போதைய வளர்ச்சிகளை பற்றியும் உலகப் பொருளாதாரத்தில் அதன் தாக்கங்களை பற்றியும் விவாதிப்பதற்கான, G20 நாடுகளின் வர்த்தகம் மற்றும் முதலீட்டு அமைச்சரவைக் கூட்டம் Trade and Investment ministers form G20 meeting அர்ஜென்டினாவில் உள்ள மார்டெல் பல்டா என்ற இடத்தில் நடைபெற்றுள்ளது.

## பொருளாதார நிகழ்வுகள்

- நாட்டின் பணப்புழக்கத்தை தூண்டுவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டு ரிசர்வ் வங்கியானது செப்டம்பர் 19 அன்று 10,000 கோடி மதிப்புள்ள அரசு கடன் பத்திரங்களை **(G-Sec)** வாங்க உள்ளது.
  - அரசு கடன் பத்திரங்களின் கொள்முதலானது வெளிச்சந்தை செயல்பாடுகள் **(OMO – Open Market Operation)** மூலம் செய்யப்படுகிறது.
- **குறிப்பு:**
  - சந்தையில் அதிக பணப்புழக்கம் இருப்பதாக ரிசர்வ் வங்கி கருதுகிறதோ அப்போதெல்லாம் இந்த பத்திரங்கள் விற்பனை செய்யப்படுகிறது.

## விளையாட்டு நிகழ்வுகள்

We Shine Academy™

- பெலாரஸில் Belarus நடைபெற்ற் சர்வதேச மல்யுத்த போட்டியில் International Wrestling Championship இந்தியாவின் வீராங்கனையான சாக்ஷி மாலிக் 62 கிலோ எடைப் பிரிவில், வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளர். இவர் இறுதிப் போட்டியில் ஹங்கேரியின் மரியன்னா சாஸ்டினிடம் தோல்வியுற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.
- குறிப்பு
  - 57 கிலோ எடைப்பிரிவில் மற்றொரு இந்திய வீராங்கனையான பூஜா தண்டா, வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- கொச்சியை மையமாகக் கொண்ட தொடக்க நிலை நிறுவனமான IROV டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனமானது Eye Rov என்ற இந்தியாவின் முதல் நீருக்கடியில் இயங்கும் ஆளில்லா வணிக விமானத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - DRDO-வின் கடற்படை மற்றும் கடற்பரப்பியல் ஆய்வகத்திற்கு (NPOL – Naval Physical and Oceanographic Laboratory) முதல் வாகனத்தை IROV ஆனது ஒப்படைத்தது.
  - இவ்விமானமானது, உலகளாவிய தரத்திற்கு இணையாகவும், நீருக்கடியில் கடுமையான மற்றும் சிக்கலான பணிகளை மேற்கொள்ளும் செயல்பாட்டு திறன் உடையது.

- அமெரிக்காவின் ஸ்பேஸ் எக்ஸ் (Space X) என்னும் நிறுவனம் சந்திரனுக்கு சுற்றுலா பயணிகளை அழைத்துச் செல்வதற்காக “பிக் பால்கன்” என்னும் இராக்கெட்டை சமீபத்தில் உருவாக்கியுள்ளது.
  - இதன்மூலம், சந்திரனுக்கு முதல் முறையாக சுற்றுலா செல்லும் சுற்றுலாப் பயணியாக ஜப்பானைச் சேர்ந்த யுசாகு மேசாவா Yusaku Maezawa என்ற நபர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.